






## அ.தி.மு.க. – பா.ஜ.க. கள்ளக்கூட்டணி– நேரடிக் கூட்டணி எது அமைந்தாலும்,

# களத்தில் கழக அணியே வெல்லுமென பணியாற்றுங்கள்!

### சென்னை, மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மத்தியில்
### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை,ஜன.11-

**சென்னை, ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு ஏற்பாட்டில், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் என 3,000 பேர்களுக்கு, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொங்கல் பரிசுத் தொகுப்புகள் அடங்கிய நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர், அடிமைகள் - பாசிஸ்ட்டுகள் கள்ளக்கூட்டணியில் வந்தாலும் சரி, நேரடிக் கூட்டணி அமைத்தாலும் சரி, களத்தில் கழக அணியே வெல்லும் என்கிற உணர்வோடு சட்டமன்றத் தேர்தலில் பணியாற்றிட வேண்டும் என்று கழக நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டார்.

விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டத்தின் சார்பாக இன்றைக்கு கிட்டத்தட்ட 3 ஆயிரம் நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் முதலில் என் புத்தாண்டு வாழ்த்துகளையும், பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மேற்கு மாவட்டத்தில் உள்ள சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் தொகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், பி.எல்.ஏ-2, பி.எல்.சி நிர்வாகிகளுடன் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்களையெல்லாம் பார்க்கும்போது போருக்குச் சென்று வெற்றியோடு திரும்பி வந்த வீரர்களைப்போல காட்சியளித்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஏனென்றால், 2024-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில், அந்தப் போரில் நீங்கள் ஆற்றிய பணி மகத்தானது.

உங்களின் பணியால்தான் நம் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

**உங்களிடத்தில் கேட்டுக்கொண்டேன்**

சென்ற ஆண்டு இதே மேடையில், இதேபோன்று ஒரு பொங்கல் பரிசு வழங்குகின்ற நிகழ்ச்சியில், நான் பேசும்போது உங்களிடம் சொன்னேன். நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது. நீங்கள் அத்தனைப்பேரும் நம் தலைவர் அவர்கள், யாரை வெற்றி வேட்பாளராக அறிவித்தாலும், அவருக்கு மிகப்பெரிய வெற்றியைக் கொடுக்க வேண்டும் என்று உங்களிடத்தில் கேட்டுக்கொண்டேன்.

நீங்களும் அந்த பணியைச் சிறப்பாகச் செய்து, ஒட்டுமொத்த தமிழ்நாடுமே வெற்றி பெற்றது. குறிப்பாக மத்திய சென்னையில் இரண்டரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம் என்றால், அதற்கு உங்களின் உழைப்பு, உங்களின் தேர்தல் பணி மிகமிக முக்கியம்.

இப்போது நான் கேட்பது, வர இருக்கின்ற சட்டமன்ற தேர்தல். இன்னும் நம் கையில் 14 மாதங்கள்தான் இருக்கின்றன. தலைவர் அவர்கள் இந்த மூன்று தொகுதிகளுக்கும் யாரை சட்டமன்ற வேட்பாளராக உங்களிடத்தில் ஒப்படைத்தாலும், அந்தத் தேர்தல் பணியைச் செய்து, நிச்சயம் இந்த சென்னை மேற்கு மாவட்டத்தில் மூன்று தொகுதியிலும் மிகப்பெரிய வெற்றி பெற்றோம் என்ற நிலையை, நீங்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதை நிச்சயமாக நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. எனவே, பொங்கல் வாழ்த்தை தெரிவிப்பதற்காக மட்டுமல்ல, உங்களின் உழைப்பை வாழ்த்துவதற்கும், பாராட்டுவதற்காகவும்தான் நம் முதலமைச்சர் அவர்கள் என்னை உங்களிடத்தில் அனுப்பி வைத்துள்ளார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கடந்த இரண்டு நாட்களாகவே பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளேன். நேற்றுகூட, சேப்பாக்கம் பகுதி நிர்வாகிகளுக்கு நம் அண்ணன் மதன் மோகன் அவர்கள் பொங்கல் பரிசுகளை வழங்கினார். அந்த நிகழ்ச்சிக்கும் நான்தான் வந்திருந்தேன். இன்றைக்கு ஒட்டுமொத்த மாவட்ட நிர்வாகிகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை சிற்றரசு அவர்கள் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார். அவருக்கு என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சென்னை மேற்கு மாவட்டம்தான்**

எத்தனையோ இடங்களுக்கு, எத்தனையோ மாவட்டங்களுக்குச் சென்றாலும், பகல் முழுக்க ஊர் சுற்றினாலும், இரவு வீட்டிற்குத்தான் வந்தாக வேண்டும். அதுமாதிரிதான் இந்த சென்னை மேற்கு மாவட்டம் எனக்கு. தமிழ்நாடு முழுக்கச் சுற்றினாலும், கடைசியில் என் வீடு இந்த சென்னை மேற்கு மாவட்டம்தான். அதுவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், என் தொகுதி சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி. என் மனதிற்கு மிகவும் நெருக்கமான மக்கள் நீங்கள்.

**சங்கிகளுக்கு ஒரு காழ்ப்புணர்ச்சி**

எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், எல்லோரும் சேப்பாக்கத்தின் செல்லப் பிள்ளை என்று என்னைச் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் இங்கு வந்திருக்கின்ற சேப்பாக்கம் திருவல்லிக்கேணி நிர்வாகிகளான நீங்கள். எவ்வளவோ பண்டிகை இருந்தாலும், பொங்கல் என்று வருகின்றபோது நமக்கு தனி மகிழ்ச்சி. தனி ஈடுபாடு வருகிறது. ஏனென்றால், பொங்கல் நம் பண்பாட்டு திருவிழா. பொங்கல் நம் பண்டிகை மட்டுமல்ல, அது நம் பண்பாட்டின் அடையாளம். அதனால்தான், சமீபகாலமாக பார்த்தீர்களென்றால் சங்கிகளுக்கு ஒரு காழ்ப்புணர்ச்சி.



நம் பண்பாட்டைச் சிதைக்க வேண்டும் என்று கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடமாக போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இப்போது பொங்கல் பண்டிகையையும் குறி வைத்திருக்கிறது ஒன்றிய அரசு. அதற்கு உதாரணம் என்னவென்றால், வருடத்தில் 365 நாட்கள் இருக்கிறது. இருந்தாலும், ஒன்றிய அரசு இந்த சி.ஏ தேர்வையும், யு.ஜி.சி நெட் தேர்வையும் பொங்கல் நாளில்தான் வைக்க வேண்டும் என்று தேதி குறித்திருக்கிறார்கள். அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறோம்.

பிரதமர் மோடி அவர்கள் சென்ற ஜனவரி 2024-ஆம் ஆண்டு நம்மையெல்லாம் ஏமாற்றுவதற்காக பொங்கல் வைத்து கொண்டாடினார். ஆனால், மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மோடிக்கே பெரிய பொங்கலைக் கொடுத்தார்கள்.

அந்த கோபத்தில்தான் இன்றைக்கு ஒன்றிய அரசு பொங்கல் பண்டிகையை நாம் கொண்டாடக்கூடாது என்று இப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் எந்தளவிற்கு நாம் கொண்டாடக்கூடாது என்றுநினைக்கிறார்களோ? அதைவிட பத்து மடங்கு அதிகமாக நாம் இன்னும் சிறப்பாக, மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும்.

**அ.தி.மு.க. – பா.ஜ.க. கள்ளக்கூட்டணி**

இப்போது நாட்டில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், நான் சொல்கிறேன் நிச்சயமாக அ.தி.மு.க - பா.ஜ.க கள்ளக்கூட்டணி இருந்துகொண்டுதான் இருக்கிறது.

இங்கு ஆளுநர் ஒருவர் இருக்கிறார். சட்டப்பேரவையில் வந்து வெறும் வாக்கிங் செய்துவிட்டு போகின்ற ஒரே ஆளுநர் இங்கு இருக்கின்ற ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள்தான். நாங்கள் பேசுவதை தொலைக்காட்சியில் இன்னும் அதிகமாக காட்டுங்கள் என்றுதானே எதிர்க்கட்சி தலைவர்கள் சொல்வார்கள். ஆனால், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சட்டமன்றத்தில் பேசும்போது, நீங்கள் ஆளுநரைச் சரியாக காட்டவில்லை என்று கேட்கிறார். அப்படியென்றால், எதிர்க்கட்சித் தலைவர் யாருக்கு குரல் கொடுக்கிறார்? ஆளுநருக்கு. இதிலிருந்தே தெரிகிறதா அவர்களின் கூட்டணி எப்படிப்பட்டது என்று.

கடந்த இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் உறவினர் வீட்டில் ஐ.டி ரெய்டு நடந்துக் கொண்டு இருக்கிறது. நிச்சயமாக நான் சொல்கிறேன் அடுத்த தேர்தலில் இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்துதான் வாக்கு கேட்கப் போகிறார்கள். அவர்கள் இரண்டு பேரையும் ஒன்றாகச் சேர்ந்து விரட்டி அடிக்க வேண்டிய வேலையை தமிழ்நாட்டு மக்களும், நீங்களும் செய்யப்போகிறீர்கள்.

**பிரச்சினைகளைத் தீர்க்க உதவுங்கள்**

கண்டிப்பாக வெற்றி உறுதி என்று யாரும் வீட்டில் உட்கார்ந்துவிடக் கூடாது. களத்தில் இறங்கி, அடுத்த 14 மாதமும் நமக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணித்துளியும் மிகமிக முக்கியம்.

இங்கு சிற்றரசு சொன்னதைபோல, நம் அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் சொன்னதைப்போல திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். ஒவ்வொரு வாக்களரையும் நீங்கள் குறைந்தது நான்கு முறையாவது நேரடியாகச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை, அவர்களின் கோரிக்கைகளை முடிந்தவரை, நீங்களே தீர்க்க முயற்சி செய்யுங்கள். அப்படி முடியவில்லை என்றால் உங்கள் பகுதியில் இருக்கின்ற நிர்வாகிகளிடம் சொல்லுங்கள். பகுதிச் செயலாளரிடம் சொல்லுங்கள், வட்டச் செயலாளரிடம் சொல்லுங்கள், இல்லையென்றால், மாவட்டச் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள், இல்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர்களின கவனத்திற்கு கொண்டு வாருங்கள் அந்த பிரச்சினையை எப்படியாவது தீர்க்க உதவுங்கள்.

**அரசின் சாதனைகள்**

நம் அரசின் சாதனைகள், இந்த நான்கு வருடத்தில் பல சாதனைகளை செய்து இருக்கிறோம். பல நலத்திட்ட உதவிகளை செய்து இருக்கிறோம். அதையெல்லாம், மக்களிடம் ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம் திட்டம். இந்த திட்டத்தின் வாயிலாக இந்த நான்கு வருடத்தில் மட்டும் மகளிர் 600 கோடி முறை பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அதுதான் அந்த திட்டத்தின் வெற்றி. ஒவ்வொரு மகளிரும் இந்த திட்டத்தின் மூலம் மாதம் தொள்ளாயிரம் வரை சேமிக்கிறார்கள்.

பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வர வேண்டும். படிக்க வேண்டும். பள்ளிக்கூடம் படித்தால் மட்டும்போதாது. கல்லூரி சென்று உயர்கல்வி படிக்க வேண்டும் என்று புதுமைப்பெண் திட்டம். அரசு பள்ளியில் படித்து, உயர்கல்வி சென்று படித்தார்கள் என்றால், ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறோம். அதேபோல் மாணவர்கள், ஆண்களும் படிக்க வேண்டும் என்று தமிழ்ப்புதல்வன் திட்டம் வழங்கப்படுகிறது. இந்த இரண்டு திட்டங்களின் மூலம் வருடத்திற்கு 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இந்த திட்டம் இதுவரை அறிமுகப்படுத்தவில்லை. நம் மாநிலத்தைப் பக்கத்து மாநிலத்தில் இருந்து வந்து பார்த்துவிட்டு செல்கிறார்கள். எப்படி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள் என்று. பள்ளிக்கூடத்திற்கு குழந்தைகள் பசியோடு வரக்கூடாது, சாப்பிட்டுவிட்டு படிக்க வேண்டும் என்று இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற 20 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போல ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். இது நம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். இதை செய்யவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், நம் தலைவர் அவர்கள் சென்ற 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணாவின் பிறந் தநாளில் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்து இன்றைக்கு 1 கோடியே 15 மகளிர் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

**உறுதிமொழி கொடுத்துள்ளேன்**

நான் நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் பேசும்போது சொன்னேன். ஒரு சில இடங்களில் குறைகள் இருக்கின்றன. நிச்சயமாக இன்னும் மூன்று மாதங்களில் அந்த குறைகள் எல்லாம் சரிசெய்யப்பட்டு தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் கண்டிப்பாக, மாதம் ஆயிரம் ரூபாய் கிடைக்கின்ற மாதிரி ஏற்பாடு செய்வோம் என்று நானே உறுதிமொழி கொடுத்து இருக்கிறேன்.

இதையெல்லாம் மக்களிடம் நாம் ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இப்போது களம் எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு இணையதளமும் முக்கியம்.

தயாநிதி மாறன் அவர்கள் பேசும்போது சொன்னார். வாட்ஸ்-அப்பில் நம் திட்டங்கள், நம் சாதனைகள், நம் கொள்கைகள் எல்லாம் இருக்கின்றன என்று சொன்னார்.

பொய்கள்தான் வேகமாக பரவிவிடும். அதனால், நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நான் உங்களைப் பொய்களைப் பரப்ப சொல்லவில்லை. உண்மையை நம் இயக்கத்தின் கொள்கைகளை, நாம் செய்திருக்கின்ற திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதற்கு நீங்கள் அத்தனைப்பேரும் ஆக்டிவாக இருக்க வேண்டும். அது காலத்தின் கட்டாயம்.

எனவே, நீங்கள் அத்தனைப்பேரும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு உழைக்க வேண்டும் இந்தத் தேர்தலில் நம் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’ என்று. 200 தொகுதி வெற்றிப்பெற போவது உறுதி. அதில், மூன்று தொகுதி ஏற்கனவே உறுதியாகிவிட்டது என்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டிலேயே சென்னை மேற்கு மாவட்டம்தான், அதிகமாக வாக்கு வித்தியாசம் என்ற வகையில், நம் தேர்தல் பணிகள் அமையவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நம் கழகம் 7-வது முறையாக ஆட்சியில் அமர வேண்டும் என்றால், நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டவாது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் அமர வேண்டும் என்றால், நீங்கள் அத்தனைப்பேரும் இன்றிலிருந்து களத்தில் இறங்கி அடுத்த 14 மாதங்கள் உங்களின் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, மீண்டும் உங்கள் அத்தனைப்பேருக்கும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன், மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர், கழக மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர்.எழிலன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராமலிங்கம், மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மா.ப.அன்புதுரை, பரமசிவம், வினோத் வேலாயுதம், கழகச் சிறுபான்மை நலஉரிமைப் பிரிவுச் செயலாளர் சுபேர்கான், கழகக் கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவைச் செயலாளர் இறையன்பன் குத்தூஸ், கழக அணிகளின் மாநிலத் துணைச் செயலாளர், சட்டமன்றத்தொகுதி பார்வையாளர்கள் சி.எச்.சேகர், கௌதம், மாவட்டக்கழக நிர்வாகிகள் விக்டர், ஆர்.என்.துரை, சங்கீதா, வி.எஸ்.கலை, அகஸ்டின்பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நுங்கை வி.எஸ்.ராஜ், வி.என்.ராஜன், வி.பி.மணி, கென்னடி, வி.பி.பொன்னரசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், மாணவர் அணி அமைப்பாளர் துபாய் விஜய், இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் பாலச்சந்தர், தினேஷ், குட்டி, மோகனவேல் உள்பலரும் கலந்து கொண்டனர்.